සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்

**Department of Samurdhi Development**

ප්‍රාථමික කර්මාන්ත සහ සමාජ සවිබලගැන්වීම් අමාත්‍යාංශය

ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு

MINISTRY OF PRIMARY INDUSTRIES AND SOCIAL EMPOWERMENT


| | | |
|---|---|---|
| මගේ අංකය<br>**எனது இல** DSD/HO/MF/130/05<br>**My No** | ඔබේ අංකය<br>**உமது இல** ..........<br>**Your No** | දිනය<br>**திகதி** 2019.10.11<br>**Date** |

சகல சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள் மற்றும்
வங்கிச் சங்க முகாமையாளர்களுக்கு

**<u>2020ம் ஆண்டின் பொருட்டு சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களின் பதிவினை புதுப்பித்தல்</u>**

வருடாந்தம் சமுர்த்தி வங்கி மற்றும் வங்கிச் சங்கங்களின் பதிவினை புதுப்பிப்பது தொடர்பில் ஆலோசனைகள் வழங்கப்பட்ட மேற்படி சம இலக்கத்தினையுடைய 2018.11.28ம் திகதியிடப்பட்ட கடிதம் தொடர்பில் அக்கடிதத்தின் மூலம் 2019ம் ஆண்டின் பொருட்டு சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி மற்றும் வங்கிச் சங்கங்களின் பதிவினை புதுப்பிப்பதற்குரிய ஆலோசனைகள் வெளியிடப்பட்டுள்ளது.

02. 2017 மார்ச் 07ம் திகதி வெளியிடப்பட்ட 2009/08 என்ற இலக்கத்தினையுடைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிட்டுள்ள கட்டளைகளின் பிரகாரம் சமுர்த்தி வங்கிகள் மற்றும் சமுர்த்தி வங்கிச் சங்கங்களை ஒவ்வொரு வருடமும் மார்ச் 31ம் திகதியிலிருந்து 30 நாட்களுக்கு முன்னர் (கட்டளை இலக்கம் 5(6)இன் கீழ்) விண்ணப்பப்படிவத்தினை சமர்ப்பித்து பதிவினை புதுப்பித்தல் வேண்டும்.

03. அதன் பிரகாரம், 2020ம் ஆண்டின் பொருட்டு தங்களால் 2020 ஜனவரி மாதம் 31ம் திகதிக்கு முன்னர் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி/ வங்கிச் சங்கத்தின் பதிவினை புதுப்பிக்கும் பொருட்டு விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்தல் வேண்டும். இப்பதிவினை புதுப்பிக்கும் நடவடிக்கைகளை சமுர்த்தி வங்கி மற்றும் வங்கிச் சங்கங்களுக்குரிய கட்டளைகளுக்குரியதாக மேற்கொள்ளப்பட வேண்டிய சட்டரீதியான நடவடிக்கையொன்றாகும் என்பதனால் உரிய விண்ணப்பங்களை பிழையின்றி குறிப்பிட்ட தினத்தில் சமர்ப்பிப்பதற்கு பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

04. 2020ம் ஆண்டிலிருந்து வங்கி/ வங்கிச் சங்கங்களை புதுப்பிக்கும் போது தனித்தனியான பதிவுக் கட்டணங்களை வரவழைத்துக் கொள்ளப்படுவதில்லை என்பதுடன் சமுர்த்தி வங்கிச் சங்கத்தால் தனது அதிகார பிரதேசத்தின் சகல வங்கி மற்றும் வங்கிச் சங்கங்களினதும் பதிவுக் கட்டணத்தை முதலில் வங்கிச் சங்கத்தில் சேகரித்துக் கொள்ளல் வேண்டும். சமுர்த்தி வங்கிச் சங்கத்தால் தனது நடைமுறைக்கணக்கில் வங்கியின் வருடாந்தபதிவினை புதுப்பிக்கும் கட்டணமான ரூபா 1000/= ஐ சேகரித்துக் கொள்ளல் வேண்டும். அங்கு சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியிலிருந்து சேகரித்த காசோலை தேறியதன் பின்னர் கீழுள்ள பிரகாரம் கணக்குப் பதிவுகளை மேற்கொள்ளல் வேண்டும்.

பற்று - வாடிக்கையாளர்கள் வைப்புச் செய்த காசோலைக் கணக்கு
வரவு – சமுர்த்தி வங்கி வருடாந்த பதிவினை புதுப்பிக்கும் கட்டணத்தை சேகரிக்கும் கணக்கு (குறியீட்டு இலக்கம் 9425)

05. அதன் பின்னர் வங்கியிலிருந்து கிடைத்த விண்ணப்பப்படிவங்கள் மற்றும் வங்கிச் சங்கத்தின் விண்ணப்பங்களை பிற ஆவணங்களுடன் குறுநிதிப் பிரிவுக்கு அனுப்புதல் வேண்டும். சகல வங்கி / வங்கிச் சங்கத்தினதும் வருடாந்த பதிவுக் கட்டணத்தின் பொருட்டு காசோலையினை <u>“முகாமையாளர், இலங்கை வங்கி பத்தரமுல்லை, சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிப் பிரிவின் முதலீட்டுக் கணக்கு இலக்கம் 3417925 இற்கு வரவிடக் கூடியவாறு வரையப்பட்டு அனுப்பப்படல் வேண்டும்</u>”. அங்கு கீழ்குறிப்பிடப்படும் கணக்குப் பதிவுகளை மேற்கொள்ளல் வேண்டும். (காசோலையினை வரையும் போது 60 நாட்களுக்கு செல்லுபடியாகக் கூடியவாறு காசோலை வரையப்படல் வேண்டும்)

பற்று – சமுர்த்தி வங்கி வருடாந்த பதிவினை புதுப்பிக்கும் கட்டணத்தை சேகரிக்கும் கணக்கு (வங்கிகளிலிருந்து கிடைத்த தொகை)


**1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla**

| | අධ්‍යක්ෂ ජනරාල්<br>பணிப்பாளர் தலைமையதிபதி<br>Director General | අධ්‍යක්ෂ (පාලන හා ආයතන)<br>பணிப்பாளர் ( நிர்வாகம்/தாபனம்)<br>Director (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී<br>பிரதான கணக்காளர்<br>Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය)<br>பணிப்பாளர் (குறு நிதி )<br>Director ( Micro Finance) | කාර්යාලය<br>அலுவலகம்<br>Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2871672/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dg@samurdhi.gov.lk | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | | |
| | | **Hot Line :0112-889007** | | **Hot Line:0112-885582** | **Hot Line: 011- 2887722** |

பற்று – செலவுக் கணக்கு சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்க பதிவுக் கட்டணத்தை சேகரிக்கும் கணக்கு (வங்கிச் சங்க வருடாந்த கட்டணம் - ரூபா 1000/= தொகை)

வரவு – நடைமுறைக் கணக்கு

06. இவ்விதத்தில் ஒரு காசோலை ஒன்றின் மூலம் சமுர்த்தி வங்கிச் சங்க மட்டத்தில் பதிவுக் கட்டணங்களை வரவழைத்துக் கொள்ளும் நோக்கமானது நிர்வாக நடவடிக்கைகளை இலகுவாக்கும் பொருட்டேயாகும், என்பதுடன் அடிக்கடி காசோலைகளை முன்வைக்காமல் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி மற்றும் வங்கிச் சங்கங்களின் பதிவினை புதுப்பிக்கும் விண்ணப்பப்படிவத்தினையும் பதிவுக் கட்டணத்தையும் குறிப்பிட்ட தினத்தில் பிழையின்றி சமர்ப்பிப்பது சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்க முகாமையாளர்களின் பொறுப்பாகும். இந்த ஆலோசனைகளுடன் இணைக்கப்பட்டுள்ள விளக்கக் கடிதத்தின் மாதிரிப்படிவத்திற்கமைய பதிவுக்குரிய காசோலையினையும் விண்ணப்படிவத்தினையும் சமர்ப்பிக்க வேண்டும்.

07. பதிவினை புதுப்பிக்கும் விண்ணப்பபடிவம், சமுதாய அடிப்படை அமைப்பின் தகவல்கள், பொதுக் கூட்ட மற்றும் கட்டுப்பாட்டுச் சபைத் தகவல்கள், நிதி நிலை விபரங்கள், வருமானக் கூற்றுத் தகவல் படிவங்கள் ஏலவே சமுர்த்தி வலைத் தளத்தில் உட்படுத்தப்பட்டுள்ளது. சமுதாய அடிப்படை அமைப்பின் தகவல்களை சமர்ப்பிக்கும் போது மீண்டும் சகல சமுதாய அடிப்படை அமைப்புக்களின் தகவல்களை சமர்ப்பிப்பது அத்தியாவசியமல்ல என்பதுடன் திருத்தப்பட்ட தகவல்களை மாத்திரம் சமர்ப்பிப்பது போதுமானதாகும்.

08. சமுர்த்தி வங்கி மற்றும் வங்கிச் சங்கத்திற்கு கட்டுப்பாட்டுச் சபை/ நிறைவேற்றுக் குழுவினை நியமிக்கும் ஆலோசனைகள் ச/ச/வ/2017/06 என்ற இலக்கத்தினையுடைய 2017.03.17ம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கை ஆலோசனைகளின் பிரகாரமாகும் என்பதுடன் 70 வயதினைத் தாண்டியவர்கள் மற்றும் தொடர்ச்சியாக இரு வருடங்களுக்கு மேலாக கட்டுப்பாட்டுச் சபையில் அல்லது நிறைவேற்றுக் குழுவின் தலைவர் பதவியினை வகிக்கின்றவர்களை நியமித்தலாகாது.

09. 2019.12.31ம் திகதிக்கு முன்னர் குறித்த பொதுக்கூட்டத்தினை நடாத்தி புதிய கட்டுப் பாட்டுச் சபை/ நிறைவேற்றுக் குழுத் தலைவரின் கையொப்பத்துடன் 2020 ஜனவரி மாதம் 31ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப்படிவங்களையும் காசோலையினையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

10. சமுர்த்தி வங்கி/ சமுர்த்தி வங்கிச் சங்க வருடாந்த பொதுக் கூட்டத்தினை நடாத்தும் போது உபசரணைச் செலவின் பொருட்டு நிதியங்களைப் பெற்றுக் கொள்ளும் போது DSD/HO/MF/SBU/05 என்ற இலக்கமும் 2018.01.18ம் திகதியின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசணைகள் மாற்றமின்றி அமுலிலிருக்கும். அதன் பிரகாரம் ஒருவருக்கு 300/= இற்குட்பட்டதாக உபசரணைச் செலவாக நிதியினை செலவழிக்க முடியும்.

11. குறிப்பிட்ட தினத்திற்கு முன்னர் விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்காத சமுர்த்தி வங்கிகள் அல்லது வங்கிச் சங்கங்களிலிருந்து பதிவுக் கட்டணத்திலிருந்து 50% தண்டப்பணமாக அறவிடப்படும் என்பதனை அறியத்தருகின்றேன். சமுர்த்தி வங்கி மற்றும் வங்கிச் சங்கங்களுக்குரிய கட்டளைகளுக்கமைய சமுர்த்தி வங்கி மற்றும் வங்கிச் சங்கங்களின் பதிவினை குறிப்பிட்ட தினத்தில் புதுப்பிக்கும் நடவடிக்கைகளின் பொறுப்புக்களை சமுர்த்தி வங்கிச் சங்க முகாமையாளருக்கு ஒப்படைக்கப்படுகின்றது.

மேற்படி ஆலோசனைகளைப் பின்பற்றி சமுர்த்தி வங்கி மற்றும் வங்கிச் சங்கங்களின் 2020ம் ஆண்டிற்குரிய பதிவினை புதுப்பிக்கும் விண்ணப்பப்படிவத்தினை சமர்ப்பிக்குமாறு வினயமுடன் அறியத் தருகின்றேன். இப் பதிவு நடவடிக்கைகள் தொடர்பில் ஏதேனும் விளக்கங்கள் தேவைப்படின் 011-2887469 என்ற தொலைபேசியினூடாக தொடர்பு கொள்ளுமாறு மேலும் குறிப்பிட விரும்புகின்றேன்.

எஸ்.ஈ.ஆர்.ரீ.எம்.எஸ்.பி. பண்டார
பணிப்பாளர் தலைமையதிபதி

**பிரதிகள்**

1. செயலாளர் - ஆரம்பக் கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு
   - த.கூ.க. பொருட்டு
2. சகல மாவட்ட சமுர்த்தி மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதிகள்/ மாவட்டச் செயலாளர்கள்
   - த.கூ.க. பொருட்டு
3. சகல மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் - அ.கொ. பொருட்டும் உ.ந. பொருட்டும்
4. சகல பிரதேச செயலாளர்கள் - அ.கொ. பொருட்டு
5. சகல பணிப்பாளர்கள் (சமுர்த்தி அ.தி) - அ.கொ. பொருட்டு
6. பிரதம கணக்காளர் - அ.கொ. பொருட்டு
7. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் - அ.கொ. பொருட்டு

Translated by: - M.M.M. Jawhar (Translator)